செ.வெ.எண்:03/ஏப்ரல் நாள்:02.04.2016

**தமிழ்நாடு அரசு செவிலியர் பதிவு மையம் மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அனுமதி பெற்ற துணை மருத்துவப்பணி படிப்புகளுக்கான கல்லூரிகளில் மட்டும் மாணவ, மாணவியர்கள் சேர்ந்து பயனடைய வேண்டும்.**

**மருத்துவ பணிகளின் இணை இயக்குநர் மரு.சகாயஸ்டீபன் ராஜ் அவர்கள் தகவல்.**

துணை மருத்துவப் பணி படிப்புகளுக்கான கல்லூரிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசு செவிலியர் பதிவு மையம் (சென்னை மற்றும் டெல்லி), டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அனுமதியினை பெற்ற கல்வி நிறுவனங்களாக இருக்க வேண்டும். அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு செவிலியர் பயிற்சி பள்ளி மேற்குறிப்பிட்டுள்ள அனுமதிகளைப்பெற்று துணை மருத்துவப் பணி படிப்புகளின் மாணவ,மாணவியர்கள் பயிற்சி பெற்று பயனடைந்து வருகின்றனர்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு செவிலியர் பதிவு மையம் (சென்னை மற்றும் டெல்லி), டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் ஆகியவற்றின் நடப்பு அனுமதியைப் பெறாத துணை மருத்துவப்பணி படிப்புகளுக்கான கீழ்க்கண்ட கல்லூரிகள் அனைத்தும் சட்டத்திற்கு புறம்பானவை என்று அறிவிக்கப்படுகின்றன.

ராயல்ஸ் இன்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூசன், சிகில்ராஜ வீதி, இராமநாதபுரம்.
கிங்ஸ் கேட்டரிங், ஹோட்டல் மேனேஜ்மென்ட் இன்டஸ்ட்ரியல் ஸ்கூல், இராமநாதபுரம்.
அன்னை தெரசால் சாரிடபில் டிரஸ்ட், சாலைத்தொரு, இராமநாதபுரம்.
எஸ்.கே.இன்ஸ்டிடியூட் ஆப் பாரா மெடிக்கல் சைன்ஸ், பகவத்சிங் ரோடு, பரமக்குடி.
ரேமா இன்ஸ்டிடியூட் ஆப் ஹெல்த் சைன்ஸ், எஜுகேசன், பரமக்குடி.
ஸ்டார் இன்ஸ்டிடியூட், பாரதி நகர், இராமநாதபுரம்.
நேசனல் இன்ஸ்டிடியூட், திருவாடானை.
மீரா இன்ஸ்டிடியூட் ஆப் ஹெல்த் சயின்ஸ், கமுதக்குடி, பரமக்குடி.
பிரின்ஸ் இன்டஸ்ட்ரியல் ஸ்கூல், இராமநாதபுரம்.
சொர்ணா பாரா மெடிக்கல், டெக்னிகல் இன்ஸ்டிடியூட். பரமக்குடி.
மேரி மாதா இன்ஸ்டிடியூட் ஆப் பாரா மெடிக்கல் சயின்ஸ், பரமக்குடி.
மதர் இந்தியா இன்ஸ்டிடியூட், பாரதிநகர், பரமக்குடி.
புளு ஸ்டார் இன்ஸ்டிடியூட் ஆப் கேட்டரிங், நர்சிங், பயர் சேப்டி, தெளிச்சாத்தநல்லூர், பரமக்குடி.
நேசனல் இன்ஸ்டிடியூட், இராமநாதபுரம்.
மேரி மாதா இன்ஸ்டிடியூட், இராமநாதபுரம்.
நாகசிவா இன்ஸ்டிடியூட், இராமநாதபுரம்.
மதர் தெரசா இன்ஸ்டிடியூட், பரமக்குடி.
மீரா இன்ஸ்டிடியூட், கமுதக்குடி.
மெல்வின் இன்ஸ்டிடியூட், இராமநாதபுரம்.
இந்திரா இன்ஸ்டிடியூட், இராமநாதபுரம்.
நேசனல் இன்ஸ்டிடியூட், பரமக்குடி.
பயோனியர் ஸ்கூல் ஆப் நர்சிங், இராமநாதபுரம்.

பொதுமக்கள் மேற்குறிப்பிட்டுள்ள கல்லூரிகளை அணுகவேண்டாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மருத்துவ பணிகளின் இணை இயக்குநர் மரு.சகாயஸ்டீபன் ராஜ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.